I Additional District Court, Thoothukudi.

<u>O.S.No. 5/2023 நாள் : 10.03.2026</u>

<u>வா.சா.1– திரு. பூலோகப் பாண்டியன்.</u>

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**

பூலையயாத் தேவருக்கு மனைவி ராமாத்தாய் என்றும், மக்கள் வெள்ளைத்தாய், முத்துப்பாண்டியன், பலவேசகன், சின்னத்தாய், கல்யாணிதாய், சோமு, வேலைய்யாத் தேவர் ஆகியோர் என்றும் சொன்னால் சரிதான். பூலைய்யாத்தேவரின் சொத்துக்கள் மேற்படி வாரிசுகள் அனைவருக்கும் பாத்தியப்பட்டது என்றால் இல்லை. பெண் பிள்ளைகளுக்கு திருமண சமயத்தில் பாகத்திற்கு ஈடாக நகைகள் மற்றும் சீர்வரிசை செய்து திருமணம் செய்து கொடுத்ததால் ஆண் வாரிசுகளுக்கு மட்டும்தான் சொத்தில் பாகம் உண்டு. மேற்படி முத்துப்பாண்டியன், பலவேசகன், சோமு, வேலைய்யா ஆகியோர் ஆண் வாரிசுகள். பெண் வாரிசுகளுக்கு எவ்வளவு நகை போட்டார்கள் என்றும், எவ்வளவு சீர் வரிசை செய்தார்கள் என்றும், ரொக்கம் கொடுத்தார்களா என்றும் எனக்குத் தெரியாது. பெண் வாரிசுகளின் பங்கிற்கு ஈடாக நகை, சீர்வரிசை கொடுத்து திருமணம் செய்ததாக வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. பெண் மக்கள் அவர்களது பாகத்தை விட்டுக் கொடுத்துவிட்டார்களா என்றால் எனக்குத் தெரியாது.

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.03.10 17:33:34 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.